## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேவிஸஸ் (ஸ்ரீ லங்கா) (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்திற்குரிய (எம்ஆர்ஐஏ) ரூபா 21 பில்லியன் கொண்டுசெல்லும் தொகையுடனான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தையும் ரூபா 70 மில்லியன் நடைமுறை மூலதன வேலையையும் நிதி நிலைமைக் கூற்று உள்ளடக்குகின்ற போதிலும் ஆரம்பித்ததிலிருந்து நாளதுவரை இவ் விமான நிலையம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.<br><br>எல்கேஏஎஸ் 36, சொத்துக்களின் நட்டக்கழிவிற்கு இணங்க நட்டக்கழிவு சுட்டிகளாக இருக்கவேண்டிய இவற்றை கருத்தில் கொண்டு எம்ஆர்ஐஏ இற்குரிய சொத்துக்கள் தனி பண உருவாக்கல் அலகொன்றாக இது இருக்கும் என்ற அடிப்படையில் நட்டக்கழிவிடப்படக்கூடும் | இணங்கவில்லை. ஏஏஎஸ்எல் முகாமைத்துவம் ‘‘எம்ஆர்ஐஏ சொத்துக்கள் நட்டக்கழிவிடப்படவில்லை’’ எனவும் அவசர தேவைப்பாடுகளிற்காக மாற்று விமானநிலையமொன்றாக இதனை பேணுவது எனவும் கருதியிருந்தது. பழுதுபார்த்தல்கள் மற்றும் பாதை சீர்படுத்தல் காலப்பகுதியில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய விமான ஓட்டப்பாதை மூடப்படும் போது இது செயற்படுத்தப்பட்டது. இது அங்கே இல்லாதிருந்தால் அம் மூடப்பட்ட காலப்பகுதியினுள் விமான ஓட்டப்பாதை சீர்படுத்தப்படும் காலப்பகுதியின் போது எந்தவொரு விமான ஓட்டமும் இல்லாதிருக்கும். | எம்ஆர்ஐஏ ஐ மீள அபிவிருத்தி செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவை இன்னமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அங்கே நட்டக்கழிவிற்கான சுட்டிகள் தற்போதும் காணப்படுகின்றதுடன் நட்டக்கழிவுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| என்பதற்கான ஏதேனும் சுட்டிக்காட்டல் உள்ளதா என சரிபார்ப்பதற்கு முகாமைத்துவம் நட்டக்கழிவு மதிப்பீட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | புதிய அரசாங்கத்தால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு விமானநிலையம் அதன் தூரநோக்குடன் மீள அபிவிருத்தி செய்யப்படுகின்றது.<br><br>அது தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை ஒருங்கிணைப்பதன் மூலம் மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் (எம்ஆர்ஐஏ) மற்றும் கொழும்பு சர்வதேச விமான நிலையம் இரத்மலானை (சீஐஏஆர்) ஆகியவற்றிற்கு விமானங்களை கவர்வதற்கு 2020 மார்ச் 04 இல் அமைச்சரவை தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் எம்ஆர்ஐஏ இல் சர்வதேச பைலட் பயிற்சி அக்கடமியை நிறுவி செயற்படுத்துவதற்கான முன்மொழிவொன்றும் 2020 மார்ச் 04 இல் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவக் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (i) | 2006 ஏப்ரல் 28 ஆம் திகதிய பிஈ/சீஓஎம்சீ/33/02 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதத்தின் பணிப்புரைக்கு முரணாக கம்பனியானது பொறுப்புக்களை மாத்திரமே பொறுப்பேற்றிருந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி கட்டிடங்கள் மற்றும் ஏனைய அசையக்கூடிய மற்றும் | அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம் ஊடாக அனைத்து அசையும் அசையாச் சொத்துக்களை பெறுமதியிடும் செயற்பாட்டில் நாங்கள் தற்போது ஈடுபட்டுள்ளோம். எனினும் ஏஏஎஸ்எல் ஆல் பயன்படுத்தப்பட்ட காணியின் உரிமைத்துவம் கம்பனிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. அத்தகைய பெறுமதி கணிப்பீடு பூர்த்தி | சாத்தியமானளவு விரைவாக மீள்மதிப்பீட்டு செயன்முறையை பூர்த்தி செய்வதற்கும் திறைசேரி செயலாளரால் பணிப்புரை வழங்கப்பட்டவாறு தேறிய சொத்துக்கள் மீது இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்குவதற்கும் பரிந்துரை |

| | | | |
|---|---|---|---|
| | அசையமுடியாத சொத்துக்ளை பெறுமதியிட்டு கணக்குகளில் பதிவதுமில்லை தேறிய சொத்து மாற்றத்திற்காக இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்குவதுமில்லை. | செய்யப்படுதல் மீது அனைத்து அசையா ஆதனங்களும் சட்டரீதியான உரிமைத்துவம் தெளிவுபடுத்தப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்படும். அத்துடன் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு தேறிய சொத்துக்கள் மீது திறைசேரிக்கு பங்குகளை வழங்கும் சாத்தியத்தன்மை ஆய்வு செய்யப்படும். | செய்யப்படுகின்றது. |
| (ii) | கொழும்பு சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் இரத்மலானை விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு முறைமையை நவீனமயப்படுத்துதல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் எந்தவொரு கடன் உடன்படிக்கையுமின்றி 2006 பெப்ரவரி 09 இல் திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் கணக்குகளில் பொறுப்பாக பதிவு செய்யப்பட்டிருந்தன. மேற்படி கடன்கள் தொடர்பாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள மொத்தக் கடன் ரூபா 10,441 மில்லியனாகும். கடன்களை பதிவு செய்வதை பிரதிசெய்வதன் மூலம் இக் கடன்கள் குடியரசுக் கணக்கில் பொறுப்பாகவும் காட்டப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டன.<br><br>மேலும் மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்திற்காக (எம்ஆர்ஐஏ) பெறப்பட்ட வெளிநாட்டுக் கடனும் எந்தவொரு வலிதான கடன் உடன்படிக்கை அல்லது | திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்ட 2006 பெப்ரவரி 04 ஆம் திகதிய பிஈ/ஜீஓசீஓ/1/1 ஆம் தொடர்புக் கடிதத்தின் பிரகாரம் இக் கடன்கள் 2006 ஏப்ரல் 28 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ ஐஎவ்ஆர்எஸ்) ஏஏஎஸ்எல் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. ஏஏஎஸ்எல் ஆல் பயன்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்களிலிருந்து ஈட்டப்படும் அனைத்து வருமானமும் திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இவ் வருமானங்களிலிருந்து கடன் சேவை மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையக் கடன் 2013 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் ஏஏஎஸ்எல் இற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. மேலும் | திறைசேரியின் ஒருங்கிணைப்புடன் பிரதிசெய்தலை தவிர்ப்பதற்கு சரியான முறையில் ஏஏஎஸ்எல் புத்தகங்களிற்கு அரசாங்க கடன்கள் மாற்றப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சாட்டுதலுமின்றி புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (எம்ஓயூ) ஒன்றின் ஊடாக பொதுத் திறைசேரியால் கம்பனிக்கு மாற்றப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவைக் கடன் மீதி ஐ.அ.டொலர் 134 மில்லியனிற்குச் சமமான ரூபா 24,587 மில்லியனாக காணப்பட்டது. | மேற்படி கடன் சாட்டுதல் செய்தல் பாதிப்பிற்கு திறைசேரியுடன் எம்ஓயூ கைச்சாத்திட்டிருந்தது. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காதமை தொடர்பான அனைத்து விடயங்களும் இத்தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு | விமான நிலையங்களை ஸ்தாபித்தல் அல்லது விரிவுபடுத்துதல் தொடர்பான பிரதான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையிடம் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஏஏஸ்எல் சொந்த நிதிகளை பயன்படுத்தி பிரதான திட்டத்தை நாளதுவரையாக்கி தொடர்வதற்கு ஏஏஸ்எல் தீர்மானித்திருந்ததுடன் பாதீட்டு ஒதுக்கீடு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்து.<br><br>முன்மொழிவு கோரிக்கை (ஆர்எவ்பி) ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பிரதான திட்ட தயாரிப்பு வேலைக்காக மதியுரை சேவைகளின் பெறுகையை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.<br><br>எனினும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் அனைத்துவிமான | முன்கூட்டியே பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிலைய மாற்றியமைத்தல்களும் புதிய நிர்மாண நடவடிக்கைகளும் (காப்புத்தளம் உ, விமான ஓட்டப்பாதை போன்றன.) 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு விடயமாக சீஏஏ ஆல் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் ஏற்கனவேயுள்ள பிரதான திட்டத்துடன் தொலைவாக காணப்பட்டது. | |
| (ஆ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவு | சட்டமா அதிபரின் சட்டரீதியான அபிப்பிராயத்தை கருத்தில் கொள்ளாமல் ''(பிறைவேட்) லிமிட்டட்'' என்ற பிற்சேர்ப்புடன் கம்பனி மீளப் பதிவுசெய்திருந்த போதிலும் ''(பிறைவேட்) லிமிட்டட்'' என்ற பிற்சேர்ப்பு அல்லது ''(பிவிரீ) எல்ரீடி'' என்ற சுருக்கப்பதமின்றி 2019 ஆம் ஆண்டின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் உள்ளடங்கலாக கம்பனியின் அனைத்து உத்தியோகபூர்வ கடிதப் பரிமாற்றங்களிலும் கம்பனியின் பெயர் காணப்படுகின்றது. | கம்பனி அதன் வணிக தோற்றத்தை பாதுகாப்பது தொடர்பாக பிரயோக சட்டத்தின் பிரகாரம் பெயர் மாற்றத்தை மேற்கொள்ளும் செயற்பாட்டில் உள்ளது. | பெயரை மாற்றுவதற்கு அல்லது இதன் பதிவு செய்யப்பட்ட பெயரை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) நல்லாளுகைக்கான பொது முயற்சி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகாட்டிகள் தொடர்பான 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 7.2 மற்றும் 7.3 ஆம் பந்திகள் | செயற்பாட்டுக் கைநூல்கள் ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுரையாக்கப்பட்டிருக்காததுடன் வரிசை அமைச்சிடமிருந்து இதற்கான அங்கீகாரங்களை பெறுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்துப் பிரிவுகள் மற்றும் அலகுகளிற்கான நடைமுறை கைநூல்கள் இறுதியாக்கப்பட்டு 2019 ஆகஸ்ட் மாதத்தில் சபைக்கு முன்னர் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது. வரிசை அமைச்சிற்கும் இதன் ஒருமைப்பாட்டிற்காக பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் கம்பனியின் நடைமுறை கைநூல்களின் மென்நகலொன்றை (soft copy) சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து செயற்பாட்டுக் கைநூல்களிற்கும் பொதுத் திறைசேரியின் ஒருமைப்பாட்டுடன் வரிசை அமைச்சிடமிருந்து அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டும். |
| (ii) | 9.2(ஈ) பந்தி | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எம்எஸ்டி ஆல் அறிவுறுத்தப்பட்டவாறு கம்பனியின் பதவியணியினரை மீளாய்வு செய்வதற்கும் அதன் அங்கீகாரத்திற்காக சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கும் 2020 ஏப்ரல் 29 இல் சபையானது குழுவொன்றை நியமித்திருந்தது. அமைப்பு கட்டமைப்பும் இதில் உள்ளடக்கப்படும். இந் நிதியாண்டு (2020) முடிவடைவதற்கு முன்னர் இச் செயற்பாடு பூர்த்தி செய்யப்படும். | பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 9.3.1(i) ஆம் பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) | எம்எஸ்டியிடமிருந்து பதவியணியினரிற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் | பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் |

| | | | |
|---|---|---|---|
| | பொதுத் திறைசேரியின் ஒருமைப்பாட்டுடன் உரிய அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | SORPs அங்கீகாரத்திற்காக வழங்கப்படும். | திணைக்களத்தில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) 9.14 ஆம் பந்தி | பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக திறைசேரிச் செயலாளரின் ஒருமைப்பாட்டுடன் எச்ஆர்எம் நடைமுறை கைநூல் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மனித வள முகாமைத்துவக் கொள்கை மற்றும் நடைமுறைக் கைநூலை தயாரித்தல் வெளித்தரப்பினரிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப கால வரையறை 2020 மார்ச் மாதத்தில் முடிவடைந்திருந்தது. எனினும் கொவிட் 19 நிலைமை காரணமாக இவ் விடயத்தை இரு தரப்பினரும் ஒருங்கிணைக்க முடியாதிருந்தது. தற்போது எச்ஆர்எம் கைநூலின் முதலாவது வரைபை நாங்கள் மீளாய்வு செய்கின்றதுடன் இப் பணியை 2020 யூலை மாதத்தினுள் இறுதியாக்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். | எச்ஆர்எம் நடைமுறை கைநூல் சபையால் அங்கீகரிக்கப்பட்டு பொதுத் திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக திறைசேரி செயலாளரின் ஒருமைப்பாடு பெறப்பட வேண்டும். |
| (v) 7.4.5 ஆம் பந்தி | சொத்துக்களை சரிபார்ப்பதற்கு உரிய நேரத்தில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 3 மாத காலப்பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கு வெளியில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. கணக்காய்வு நிறுவனமொன்றை தெரிவு செய்தல் 2020.06.25 இல் கேள்விச் சபை ii ஆல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.<br><br>பட்டியலிட்டவாறு கேள்விச் சபையை தொடங்க முடியாதிருந்ததுடன் கொவிட்-19 பெருந்தொற்று | ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 15 இல் அல்லது அதற்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு சபை நியமனம் செய்யப்பட வேண்டியதுடன் சபையானது ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இன் பின்னர் சாத்தியமானவுடன் தலைவரிற்கு அறிக்கையிட |

| | | |
|---|---|---|
| | மற்றும் 2020 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாடு மூடப்பட்டிருந்தமை காரணமாக கேள்வி நடைமுறை தாமதமாகியிருந்தது. | வேண்டும். |

### 1.7 ஐரீ பொதுக் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதி முறைமை 1984 இல் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் காலாவதியான நிகழ்ச்சித்திட்ட மொழியான COBOL முறைமையை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. பயன்படுத்துநர்களால் வேண்டப்பட்ட தொடர்ச்சியான மாற்றியமைத்தல்கள் காரணமாக நிதி முறைமையில் பயன்படுத்தப்பட்ட இத் தொகுதிகளை (modules) தொடர்வதில் உயர் ஆபத்து இனங்காணப்படுகின்றதுடன் தொகுதிகள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட முறைமைகளிற்கிடையே ஒருங்கிணைப்பு காணப்படவில்லை. | தற்போதைய முறைமையின் மட்டுப்படுத்தல்கள் இச் சிக்கலிற்கான காரணமாகும். இது இனங்காணப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவம் புதிய முறைமையொன்றின் பெறுகையை ஆரம்பித்திருந்தது. | புதிய ஒருங்கிணைந்த முறைமையை விரைவாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 10,996,009,352 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 5,313,155,819 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 5,682,853,533 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டில் ஏற்பட்ட செலாவணி நட்டத்திற்குப் பதிலாக கடன் மாற்றத்தில் ஏற்பட்ட செலாவணி இலாபம் காரணமாக நிதிக் கிரயம் ரூபா 8,028,348,443 ஆல் குறைவடைந்தமையே முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| வருமானம் | 2019 | 2018 | வேறுபாடு | % |
|---|---|---|---|---|
| விமான (Aeronautical) வருமானம் | 5,430,766,464 | 5,234,386,906 | 196,379,558 | 4 |
| விமானமற்ற (Non Aeronautical) வருமானம் | 20,221,486,743 | 19,724,793,830 | 496,692,913 | 3 |
| ஏனைய வருமானம் | 63,840,889 | 3,779,811,015 | (3,715,970,126) | (98) |

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்பாடற்ற வருமானம் | 4,164,672,412 | 3,134,442,144 | 1,030,230,268 | 33 |
| மொத்த விமான நிலைய வருமானம் | 29,880,766,508 | 31,873,433,895 | (1,992,667,387) | (6) |
| **நிர்வாக மற்றும் தாபன செலவினங்கள்** | | | | |
| பதவியணியினர் கிரயம் | 6,513,810,228 | 6,051,848,491 | 461,961,737 | 8 |
| வரையறுத்த பங்களிப்பு/ நலன் திட்டக் கிரயம் | 1,602,849,819 | 1,406,277,355 | 196,572,464 | 14 |
| பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு | 2,856,562,491 | 2,693,830,019 | 162,732,472 | 6 |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 462,842,807 | 397,856,041 | 64,986,766 | 16 |
| கடன்பட்டோர் நட்டக்கழிவிற்கான ஏற்பாடு | 397,143,394 | 238,433,748 | 158,709,646 | 67 |
| **நிதிக்கிரயம்** | | | | |
| கடன் வட்டி | 1,325,977,575 | 1,008,360,931 | 317,616,644 | 31 |
| செலாவணி (இலாபம்)/ நட்டம் | 156,729,149 | (8,189,235,938) | (8,345,965,087) | (102) |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

| **விகிதத்தின் வகை** | **2019** | **2018** | **2017** | **2016** | **2015** |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 7.23 | 3.49 | 2.78 | 2.65 | 2.09 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 7.10 | 3.43 | 2.71 | 2.60 | 2.06 |
| தேறிய இலாப விகிதம் (%) | 43 | 18 | 42 | 38 | 05 |
| பங்கொன்றிற்கான உழைப்பு (ரூபா) | 54,980 | 26,566 | 43,574 | 34,598 | 4,084 |
| தேறிய சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | 28 | 19 | 37 | 42 | 07 |
| பிரயாணி ஒருவரிற்கான வருமானம் (ரூபா) | 2,582 | 2640 | 2,085 | 1,936 | 1,846 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறுங்கால வங்கி வைப்பு 27 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் செலுத்த வேண்டிய வியாபாரம் 74 சதவீதத்தால் குறைவடைந்தமை என்பன நடைமுறை விகிதம் மற்றும் விரைவு சொத்துக்கள் விகிதம் என்பன அதிகரித்தமைக்கு பங்களித்த பிரதான காரணங்களாகும்.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட செலாவணி நட்டத்திற்குப் பதிலாக 2019 ஆம் ஆண்டின் போது கடன் மாற்றல் தொடர்பான செலாவணி இலாபம் அதிகரித்தமை காரணமாக பிரதானமாக ஆண்டின் போது பங்கொன்றிற்கான உழைப்பு 107 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) 2018 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட செலாவணி இலாபத்திற்குப் பதிலாக 2019 ஆம் ஆண்டின் போது கொடுக்கல்வாங்கல்கள் மீதான தேறிய செலாவணி இலாபம் குறைவடைந்தமை காரணமாக பிரதானமாக ஏனைய வருமானம் 98 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கம்பனியின் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளின் (கேபிஐ) பௌதீக செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|---|
| சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை | 62,195 | 67,351 | 62,850 | 61,637 | 56,156 |
| மொத்தப் பயணிகள் அசைவின் எண்ணிக்கை | 9,958,688 | 10,884,028 | 9,957,502 | 9,466,248 | 8,505,740 |
| சரக்கு அசைவுகள் (மெற்றிக் தொண்) | 259,089 | 279,559 | 274,047 | 248,347 | 220,422 |
| கையாளப்பட்ட விமானம் ஒன்றிற்கான மொத்தக் கிரயம் (ரூபா ‘000) | 236 | 318 | 202 | 216 | 256 |

முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI’s) மீதான வருடாந்த இலக்குகள் கம்பனியால் நிர்ணயிக்கப்பட்டிருக்காததால் கணக்காய்வின் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் உண்மையான செயலாற்றலை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எல்கேஎஸ் 26 – ஓய்வூதிய நலன் திட்டங்கள் மூலம் கணக்கீடு செய்தல் மற்றும் அறிக்கையிடலின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய நலன் திட்டத்திற்காக முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பணிக்கொடை பொறுப்பிற்கு பொருந்தும் வகையில் நீண்டகால திபெஞ்சர்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந் நோக்கத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது.<br><br>கம்பனியின் ஓய்வூதிய நலன் பொறுப்புக்களிற்கு உதவுவதற்கு அர்ப்பணிப்பு நிதியத்தை உருவாக்குவதற்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,638.3 மில்லியன் தொகையான திபெஞ்சர்களை கம்பனி முன்வைத்திருந்தது.<br><br>நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 14 இல் இதனை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதிய நலன் திட்டத்திற்கான முதலீடு தெளிவாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | தற்போதைய தொழில்நுட்பத்துடன் இணங்குகின்ற ஈஆர்பி முறைமை 2019 திசெம்பர் 31 வரையிலும் கம்பனிக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏஎஸ்எல் முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு ஈஆர்பி முறைமை இரண்டு கட்டங்களில் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. முதலாவது கட்டமாக நிதி, வழங்கல் சங்கிலி மற்றும் சம்பளப்பட்டியல் தொகுதி (Payroll modules) அமுல்ப்படுத்தப்படும். அத்துடன் தற்போது செயற்படுகின்ற உள்நாட்டில் உருவாக்கப்பட்ட புற சாதன முறைமைகள் (in-house developed peripheral systems) இதில் ஒருங்கிணைக்கப்படும். இது 2020 ஆகஸ்ட் 01 அளவில் நேரலைக்கு செல்ல பட்டியலிடப்பட்டுள்ளது.<br><br>அமுல்ப்படுத்தலின் கட்டம் 2 இற்காக கம்பனியால் ஆரம்பிக்கப்பட்ட மதியுரை செயற்திட்டம் (எஸ்எம்டி) தற்போது நடைபெற்று வருகின்றது. | கம்பனியின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு சாத்தியமானளவு விரைவாக புதிய ஈஆர்பி முறைமையை அறிமுகப்படுத்தி அமுல்ப்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (ii) சொத்துக்கள் குறியீடு இடுதல் முறைமை மற்றும் முறையாக நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லைல. | 12 இலக்க குறியீடு இடுதல் முறைமைக்குப் பதிலாக 16 இலக்க வாசித்தறியக்கூடிய அடையாளக்குறியீட்டை இடுதல் முறைமை (coding barcode readable system) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிவேடுகளை சமர்ப்பிக்கும் நேரத்தில் பிரதான நிலையான சொத்துப் பதிவேடு புதிய குறியீடுகளுடன் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பட்டியலிடப்பட்டவாறு 2020 ஆகஸ்ட் 15 அளவில் செயற்பாட்டிலுள்ள ஈஆர்பி செயற்திட்டத்திற்கு உட்சேர்ப்பதற்காக தற்போது புதிய குறியீடுகளுடன் இது நாளதுவரையாக்கப்பட்டு வருகின்றது. | ஈஆர்பி முறைமை சாத்தியமானளவு விரைவாக அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் சொத்தப் பதிவேடு ஒழுங்காக நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

### 3.4 குறைவாக பயன்படுத்தப்பட்ட நிதிகள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2012 மார்ச் 28 மற்றும் 2016 மார்ச் 24 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக நிலை II கட்டம் 02 இற்காக ஜப்பானிய யென் 74,397 மில்லியன் நிதியளிப்பிற்காக ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையுடன் இரண்டு உடன்படிக்கைகளை கம்பனி கைச்சாத்திட்டிருந்தது. எனினும் நிதியளிப்பு பெறுமதியில் 92 சதவீதத்திற்கு சமமான ஒப்பந்தப் பெறுமதி 2019 திசெம்பர் 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிகள் குறைவாக பயன்படுத்தப்பட்டதன் காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களாக 2020 ஏப்ரல் 20 இல் உள்ளவாறு ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கு ரூபா 290.3 மில்லியன் தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. வடிவமைப்பை மாற்றுதல் செயற்திட்ட தாமதத்திற்கான | பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் புதிய terminal கட்டிடமொன்றை மீள வடிவமைத்து நிர்மாணிப்பதற்காக அமைச்சரவையால் பணிப்புரை வழங்கப்பட்டதன் காரணமாக ஜேஐசீஏ மீளாய்வு மற்றும் ஒருமைப்பாடு காரணமாக மேற்படி கடனை பயன்படுத்துதல் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் எஸ்எல்-பி104 இற்கான கடன் தொகை முழுமையாக காணப்படும் வரை மொத்த பயன்படுத்தப்படாத கடன் மீதி தொடர்பாக 0.1% கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். 2020.02.19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் Taisei கூட்டுத்தாபனத்திற்கு வேலைப்பொதி ஏ இனை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2020.03.04 இல் வேலை ஏற்புக் கடிதம் வழங்கப்பட்டு 2020.03.13 இல் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 2 மாத காலத்தினுள் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் முற்பணக் கொடுப்பனவை கோரும் செயன்முறையில் ஒப்பந்ததாரர் உள்ளார். எஸ்எல்பி104 கடனிலிருந்து முற்பணக் கொடுப்பனவு | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலைப்பொதி ஏ இன் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிக தாமதங்களை தவிர்ப்பதற்கு காலரீதியாக நிர்மாண செயன்முன்னேற்றம் மிளாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காரணமாக இருந்தது. | விடுவிக்கப்பட்டதுடன் அங்கே கடனிலிருந்தான பணவளிப்பு தொகை கணிசமானதாக காணப்படுவதுடன் 3 ஆண்டுகளினுள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பாாக்கப்படுகின்றது. | |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பட்டியலிடப்பட்ட காலத்தினுள் பெரும்பாலான பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் பெறுகையில் அதிகளவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. உதாரணமாக 2019 ஆம் ஆண்டின் போது ஆர்எவ்ஐடி அட்டைகளின் கொள்வனவை பூர்த்தி செய்வதற்கு கம்பனிக்கு ஒன்பது மாதங்கள் எடுத்திருந்தது. | வழங்கப்படவில்லை. | பெறுகை நடவடிக்கைகள் கால வரையறையினுள் நிறைவேற்றப்பட வேண்டியதுடன் தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை அகற்றுவதற்கு முறையான அகற்றல் நடைமுறை எதுவும் காணப்படாததுடன் அவை தொடர்பாக சுற்றாடலிற்கு பாதகமான தாக்கம் காணப்படுகின்றது. | வழங்கப்படவில்லை. | பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை முறையாக அகற்றும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் நிலைபேறான இலக்குகள் இனங்காணப்பட்டு கம்பனியின் கூட்டிணைந்த திட்டம்/ வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்படவில்லை. | ஏனைய தொடர்புபட்ட நிறுவனங்களின் முன்கூட்டிய ஒருங்கிணைப்புடன் கம்பனியால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட வேண்டும். |